**வவுனியா நகர சபை**

------------------------------------

**வவுனியா மாவட்டம்**

----------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

--------------------------------

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

---------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஓகஸ்ட் 08 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 26 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா நகரசபையின் 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன,

(அ) நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சல் கூற்று சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் நீதிமன்ற தண்டப்பண நிலுவை ரூபா 10,000 ஆக உள்ள ஆல் மிகைப்படுத்தி காட்டப்பட்டுள்ளது.

(ஈ) நன்கொடையாக வழங்கப்பட்ட 05 பேருந்து வண்டிகளின் பெறுமதிகள் கணிப்பிடப்படாலும் கணக்குக்கும் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விக்குச் சான்றுகள் இன்மை.**

---

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 81,925 பெறுமதியுடைய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப் படுத்த முடியாதிருந்தது.

**1.3.3 இணக்கமின்மை**

---

இலங்கை சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் விதி இலக்கம் 571 இலுள்ள ஏற்பாடுகளின் படி ரூபா 1,163,098 கூட்டுத்தொகையான காலம் கடந்த வைப்புக்கள் கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**02. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

---

**2.1 நிதிசார் விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2013 டிசம்பர் 31 ல் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா. **21,654,417** ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும் போது நேரொப்பமான முன்னைய ஆண்டில் மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமான மிகை ரூபா. **12,390,503** ஆகவும் விளைந்திருந்தது.

**2.2 பெற வேண்டிய கணக்குகள்**

---

அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதி பல வருடங்களுக்கு மேலாக மின்சார சில்லறை கடன் வழங்குனர் மீதிகள் 8,805,091 ஆக இருந்தது.

ஆ) சில்லறை கடன் வழங்குனர் கொடுப்பனவில் 1995 ஆம் ஆண்டு மேலதிகமாக செலுத்தப்பட்ட பெறுமதி ரூபா 17,960 உரிய கடன் வழங்குநரிடம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 வருமான நிர்வாகம்

----------------------------------

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான மற்றும் பெறப்படவேண்டிய வருமானம்

------------------------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வருமானம் உண்மையான பெறவனவுகள் மற்றும் நிலுவை வருமானம் என்பவைகளின் நிலைமை பின்வருமாறு இருந்தன.

| வருமான விபரம் | மதிப்பீட்டு வருமானம் | உண்மை வருமானம் | திரட்டிய நிலுவை 31.12.2012 உள்ளபடி |
|---|---|---|---|
| வீதவரிகளும் வரிகளும் | 22,546,800 | 23,596,884 | 32,630,523 |
| வாடகைகள் | 29,148,380 | 27,970,238 | 1,880,320 |
| உரிமங்கள் | 2,002,500 | 2,036,995 | 6,486,881 |
| ஏனைய வருமானங்கள் | 93,148,500 | 68,869,794 | 1,092,774 |
| **மொத்தம்** | **146,846,180** | **122,473,911** | **42,090,498** |

### 2.3.2 நீதிமன்ற தண்டப்பணம்

------------------------------------------

நீதிமன்ற தண்டப்பணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபை பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 6,476,881 பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்தது.

### 2.3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்திய சொத்துக்கள்

பதினேழு வாகனங்கள் நகரசபையால் பயன்படுத்தப்படாமை அவதானிக்கப்பட்டன.

### 2.3.4 நிலுவை வருமானம்

----------------------------------------

முன்னைய காலப்பகுதி சபையினால் பெறவேண்டியுள்ள ரூபா 1,917,919 தொகையான களியாட்டவரி, வாடகை, ஆதனவரி மற்றும் ஏனையவைகள் அறவீடு செய்வதற்கு நகர

சபை கட்டளைச்சட்டத்தின் 171 (அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

(அ) வாகன அனுமதிப்பத்திரங்கள் எட்டு வாகனங்களுக்கு உரிய காலத்தில் பெறப்படாமையால் தண்டப்பணம் ரூபா 237,600 மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மின்சார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய மின்சார கட்டணம் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக ரூபா 2,564 தண்டப்பணமாகவும் ரூபா 11,862 மின்சார துண்டிப்பு மீள் இணைப்பு கட்டணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 முகாமைத்துவ பலவீனங்கள்**

சபையின் நான்கு உழவு இயந்திரங்களின் வாகன பதிவுப் புத்தகம் இல்லாமை காரணமாக பயன்படுத்தப்படாமல் உள்ளது.

**3. <u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>**

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

அ) நிலையான சொத்துப் பதிவேடு

ஆ) கட்டுப்பாட்டுப் கணக்குகள்